TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109470

1. District / மாவட்டம் : திருவாரூர்   P.S. / காவல்நிலையம் : V&AC   Year / ஆண்டு : 2023   FIR No. / முதல் தகவல் அறிக்கை எண் : 5/2023   Date / நாள் : 9-8-2023

2. (i) Act / சட்டம் : IPC   Sections / பிரிவுகள் : 120(B), 420, 409
(ii) Act / சட்டம் : Prevention of Corruption Act 1988   Sections / பிரிவுகள் : 468, 471, IPC
(iii) Act / சட்டம் :   Sections / பிரிவுகள் : 13(2) r/w 13(1)(c)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 2009   Date to : நாள் வரை 2016
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்   Time : நேரம் 09.08.2023-13.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம் 09.08.2023. 13.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In the out come of PE

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மேனாங்குடி ஊராட்சி 45 Km வ.கி
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.R. சித்ரா   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் G. இராமதாஸ்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1979   (d) Nationality : நாட்டினம் -   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் காவல் ஆய்வாளர்   (g) Address : முகவரி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. N. ராம்குமார் த/பெ நாகராஜன் முன்னாள் ஊராட்சி செயலாளர் மேனாங்குடி ஊராட்சி, நன்னிலம் வட்டாரம்
2. D. புகழேந்தி த/பெ தெட்சிணாமூர்த்தி முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் மேனாங்குடி ஊராட்சி, நன்னிலம் வட்டாரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
?

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u>

திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.R.சித்ரா ஆகிய நான் 09.08.2023 தேதி 13.00 மணியளவில், திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தின் குறிப்பாணை PE 37/2022/RDP/TVR நாள்.19.07.2023-ன் படி PE 37/2022/RDP/TVR அறிக்கையை பார்வையிட்டு வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:

<u>குற்றம்சாட்டப்பட்டுள்ள எதிரிகளின் விபரம் :</u>

1) எதிரி-1 திரு.N.ராம்குமார் த/பெ.நாகராஜன், முன்னாள் ஊராட்சி செயலாளர், மேனாங்குடி ஊராட்சி.

2) எதிரி-2 திரு.D.புகழேந்தி த/பெ.தெட்சிணாமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், மேனாங்குடி ஊராட்சி.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.R. சித்ரா
Rank: நிலை ........ No. எண் ........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க.பிரிவு
திருவாரூர் 9/8/2023

எதிரி-1 திரு.N.ராம்குமார் த/பெ.நாகராஜன், முன்னாள் ஊராட்சி செயலாளர், மேனாங்குடி ஊராட்சி, என்பவர் கடந்த 01.10.2005 முதல் 09.02.2018 வரையிலான காலங்களில் நன்னிலம் வட்டாரம், மேனாங்குடி ஊராட்சியின் ஊராட்சி செயலராக பணிபுரிந்துள்ளார். எனவே இவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(C) படி பொது ஊழியர் ஆவார்.

எதிரி-2 திரு.D.புகழேந்தி த/பெ.தெட்சிணாமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், மேனாங்குடி ஊராட்சி என்பவர் கடந்த 2006 முதல் 2016 வரையிலான காலங்களில் நன்னிலம் வட்டாரம், மேனாங்குடி ஊராட்சியில் ஊராட்சிமன்ற தலைவராக பதவி வகித்துள்ளார்.

2009-2016 ஆண்டுகளில் உள்ளாட்சி தணிக்கை அலுவலர்களால் மேனாங்குடி ஊராட்சியினை தணிக்கை செய்து அளிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையில் மேனாங்குடி ஊராட்சியில் கைபம்புகள், விசைப்பம்புகள் பராமரிப்பு, கைபம்பு, தெருவிளக்கு உதிரிபாகங்கள் கொள்முதல், தெருவிளக்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டி பராமரிப்பு மற்றும் அதற்கான பொருட்கள் கொள்முதல் செய்ததற்கான செலவின சீட்டுகள், ரொக்க பதிவேடு, துணை செலவின சீட்டுகள் ஆகியவற்றை முறையாக பராமரிக்காமல் எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் அரசாணையில் குறிப்பிட்டுள்ள செலவினங்களுக்கான வரம்புகளை மீறி மிகை செலவினமாக காட்டி ஊராட்சி நிதியிலிருந்து தொகையை கையாடல் செய்து சுயலாபம் அடைந்துள்ளார்கள்.

<u>குற்றச்சாட்டு-1</u>

மேனாங்குடி ஊராட்சியில் 2009-10 ல் மொத்தம் 63 எண்ணிக்கையில் கைபம்புகள் உள்ளன, அரசாணை எண்.84 ஊ.வ (தி3) துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை எண்.83 ஊ.வ (ம) ஊ (மா.தி-11) துறை நாள் 29.06.2006 ன்படியும் கைப்பம்பு ஒன்றிற்கு ஆண்டு பராமரிப்பு தொகையாக ரூ.600/- மட்டுமே செலவிடலாம். 63 கைப்பம்புகளுக்கு ரூ.37,800/- மட்டுமே செலவழிப்பதற்கு அரசாணையில் அனுமதி உள்ள பட்சத்தில் மேற்படி ஊராட்சியில் இந்த செலவீனத்தில் ரூ.82,200/- செலவு செய்யப்பட்டுள்ளதால், மிகை செலவினமாக ரூ.34,400/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

2009-10 ஆம் ஆண்டுக்கு விசைப்பம்பு உதிரி பாகங்கள் பெறுவதற்கு மாவட்ட கொள்முதல் குழு நிர்ணயித்த விலை மற்றும் நிறுவனங்களில் பொருட்கள் பெறப்படவில்லை. மேலும் இவ்வூராட்சியில் 9 விசைப்பம்புகள் உள்ளன, அரசாணை எண்.84 ஊ.வ (தி3) துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை எண்.83 ஊ.வ (ம) ஊ(மா.தி-11) துறை நாள் 29.06.2006 ன்படியும் ஒரு விசைபம்புக்கு ரூ.7,500 வீதம் ரூ.67,500/ - மட்டுமே செலவிட அனுமதி உள்ள பட்சத்தில் இந்த செலவீனத்தில் ரூ.1,45,585/- செலவு செய்யப்பட்டுள்ளதால், மிகை செலவினமாக ரூ.78,085/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

**குற்றச்சாட்டு-2**

மேனாங்குடி ஊராட்சியில் 2010-11 ஆம் ஆண்டில் ஊராட்சிக்கு தேவையான கைப்பம்பு உதிரிபாகங்கள் பெற்ற செலவினங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை, ஊராட்சியில் மொத்தம் 67 எண்ணிக்கையில் கைப்பம்புகள் உள்ளன, அரசாணை எண்.84 ஊ.வ (தி3) துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை எண்.83 ஊ.வ (ம) ஊ(மா.தி-11) துறை நாள் 29.06.2006 ன்படியும் கைப்பம்பு ஒன்றிற்கு ஆண்டு பராமரிப்பு தொகையாக ரூ.600 வீதம் ரூ.40,200/- மட்டுமே செலவிட அனுமதி உள்ள பட்சத்தில் இந்த செலவீனத்தில் ரூ.85,695/- செலவு செய்யப்பட்டுள்ளதால் மிகை செலவினமாக ரூ.45,495/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

**குற்றச்சாட்டு-3**

மேனாங்குடி ஊராட்சியில் 2011-12 ஆம் ஆண்டில் ஊராட்சிக்கு தேவையான கைப்பம்பு உதிரிபாகங்கள் பெற்ற செலவினங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை, ஊராட்சியில் மொத்தம் 65 எண்ணிக்கையில் கைப்பம்புகள் உள்ளன, அரசாணை எண்.84 ஊ.வ (தி3) துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை எண்.83 ஊ.வ (ம) ஊ(மா.தி-11) துறை நாள் 29.06.2006 ன்படியும் கைப்பம்பு ஒன்றிற்கு ஆண்டு பராமரிப்பு தொகையாக ரூ.600 வீதம் ரூ.39,000/- செலவிடலாம், ஆனால் இந்த செலவீனத்தில் ரூ.1,09,050/- தொகை செலவிடப்பட்டுள்ளதால் மிகை செலவினமாக ரூ.70,050/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

**குற்றச்சாட்டு-4**

மேனாங்குடி ஊராட்சியில் 2013-14 ஆம் ஆண்டில் ஊராட்சிக்கு தேவையான தெருவிளக்கு, விசைப்பம்பு மற்றும் பைப்லைன் உபகரணங்கள் பெற்ற செலவினங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை, அரசாணை எண்.84 ஊ.வ (தி3) துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை எண்.83 ஊ.வ (ம) ஊ(மா.தி-11) துறை நாள் 29.06.2006 ன்படியும் ஒரு மின்கம்பத்திற்கு 300 ரூபாயும், ஒரு விசைப்பம்பிற்கு ரூ.7500/- ரூபாயும் செலவு செய்யலாம், ஆனால் மேனாங்குடி ஊராட்சியில் தெருவிளக்கு மின்கம்பத்திற்கு ரூ.2,37,865/- தொகையும் விசைப்பம்பு மற்றும் பைப்லைன் உபகரணங்கள் பெற்ற செலவினங்களுக்காக ரூ.1,66,900/- தொகையும் ஆக கூடுதல் மிகை செலவினமாக ரூ.4,04,765/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

**குற்றச்சாட்டு-5**

மேனாங்குடி ஊராட்சியில் 2015-16 ஆம் ஆண்டில் மொத்தம் 160 எண்ணிக்கையில் தெருவிளக்கு மின்கம்பங்கள் இருந்துள்ளது. அரசாணை எண்(நி) எண். 149/ஊ.வ.து/ நாள் 16.07.1998 மற்றும் அரசாணை எண்.223 ஊ.வ.து நாள் 19.12.1994 ன்படியும் ஒரு ஆண்டிற்கு ஒரு மின் கம்பத்திற்கு (ஆண்டுக்கு குழல் பல்பு-2, சோக்-1, ஸ்டார்ட்-3) தெருவிளக்கு உதிரிபாகங்கள் கொள்முதல் செய்திட உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, பயன்பாட்டில்

உள்ள 320 தெருவிளக்கு மின்கம்பங்களுக்கு ரூ.1,04,000/- அனுமதிக்கப்பட்ட செலவு தொகையாகும். ஆனால் இந்த செலவினத்தில் ரூ.2,05,795/- செலவு செய்து மிகை செலவினமாக ரூ.1,01,795/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

மேனாங்குடி ஊராட்சியில் 2015-16 ஆம் ஆண்டில் மொத்தம் 64 எண்ணிக்கையில் கைப்பம்புகள் உள்ளன. அரசாணை(நி) எண்.84 ஊ.வ (ம) உ.துறை நாள் 05.05.1998 மற்றும் அரசாணை(நி) எண்.62/ ஊ.உ.து நாள் 29.06.2006 ன்படியும் ஒரு கைப்பம்பிற்கு ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.600 வீதம் ரூ.38,400/- தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது, ஆனால் 64 கைப்பம்புகளுக்கு ரூ.2,17,440/- பராமரிப்பு செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மிகை செலவினமாக ரூ.1,79,040/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

மேனாங்குடி ஊராட்சியில் 2015-16 ஆம் ஆண்டில் மொத்தம் 15 எண்ணிக்கையில் விசைப்பம்புகள் உள்ளன. அரசாணை (நி) எண்.83 ஊ.வ.து நாள் 29.06.2006 ன்படி ஒரு விசைப்பம்பிற்கு ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.7500 வீதம் ரூ1,12,500/- தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது, ஆனால் 15 விசைபம்புகளுக்கு ரூ.2,64,550/- செலவு செய்யபப்பட்டுள்ளதால் மிகை செலவினமாக ரூ.1,52,050/- செலவு செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

மேனாங்குடி ஊராட்சியில் 2015-16 ஆம் ஆண்டில் மரக்கிளைகளை வெட்டியதற்கு ரூ.4,941/- செலவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் வெட்டிய மரக்கிளைகளை ஏலம் விடப்பட்டு ஏலப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு ஏலத்தொகையினை ஊராட்சி கணக்கில் செலுத்தப்படாமல் ரூ.4,941/- ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

## குற்றச்சாட்டு-6

மேனாங்குடி ஊராட்சியில் 2015-16 ஆம் ஆண்டில் MGNREGS திட்டத்தின் கீழ் 53 பயனாளிகள் பணி செய்தது போன்று ஊராட்சியில் பராமரிக்கப்படும் பதிவேடு-1 மற்றும் தினசரி வருகைப்பணிதாளில் பயனாளிகளின் பெயரில் ஒரே நபரே கையெழுத்தினை செய்து 53 நபர்களுக்கு கூலி தொகை வழங்கியது போன்று ரூ.55,949/- தொகை ஊராட்சி நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளதால், ரூ.55,949/- தொகை ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்படி எதிரிகள் 1.திரு.N.ராம்குமார், த/பெ.நாகராஜன், முன்னாள் ஊராட்சி செயலாளர், மேனாங்குடி ஊராட்சி, நன்னிலம் வட்டாரம் 2.திரு.D.புகழேந்தி த/பெ.தெட்சிணாமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், மேனாங்குடி ஊராட்சி, ஆகியோர் மீது பதிவுறு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள திருவாரூர் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் ந.க.எண் 1863/2023/அ2/உ.இ(ஊ)நாள்.26.05.2023-ன்படி முன் அனுமதி (U/s 17(A) P.C Act 2018படி) பெற்றும், மேற்படி எதிரி-1 திரு.N.ராம்குமார் த/பெ. நாகராஜன் முன்னாள் ஊராட்சி செயலளர், மேனாங்குடி ஊராட்சி, நன்னிலம் வட்டாரம், எதிரி-

2 திரு.D.புகழேந்தி த/பெ.தெட்சிணாமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், மேனாங்குடி ஊராட்சி, ஆகியோர் மீது 09.08.2023ஆம் தேதி 13.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2023 ச.பிரிவு 120(B), 420, 409, 468, 471 இ.த.ச மற்றும் 13(2) உ/இ 13(1)(c) ஊழல் தடுப்பு சட்டம் 1988ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் திருவாரூர் மாவட்ட ஆட்சியரின் அவர்கள் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய ந.க.எண் 1863/2023/அ2/உ.இ(ஊ) நாள். 26.05.2023-ன்படி வழங்கியுள்ள முன் அனுமதியின் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

09/08/2023

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவாரூர்.